**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**<u>அசல் வழக்கு எண். 727/2021</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2023- ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17 - ஆம் நாள் திங்கள்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW1 - வது நபரின் வாக்குமூலம் ( 1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி ) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது. | | | | | |
| பெயர் | : | குமரேசன் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | ராமலிங்கம் | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | ஒதியம் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 56/2023 |

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

1. நான் வழக்கு தொடர்ந்துள்ள தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. **வா.சா.ஆ 5** ஆன புகைப்படத்தில் உள்ள நிலத்திற்கு அருகாமையில் எனது நிலம் உள்ளதா என்றால் சற்று தொலைவில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா .சா.ஆ 5 ஆன புகைப்படம் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாதது என்று சொன்னால் சரியல்ல.

2. நான் உண்மையிலேயே தாவா சொத்தை 40 வருடங்களாக அனுபவம் செய்து வந்திருந்தால் நீதிமன்ற ஆணையர் மூலம் மேற்படி சொத்தை அளந்து இருப்பேன் தாவா சொத்தை நான் 40 வருடங்களாக அனுபவம் செய்யாத காரணத்தினால்தான் நான் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் 01.12.2020 ம் தேதி திடீரென வில்லங்க சான்றிதழ் கோர காரணம் என்ன என்றால் கூட்டுறவு சொசைட்டியில் லோன் வாங்குவதற்காக EC போட்டுப்பார்த்தேன்.

3. கடந்த 28.10.2020 ம் தேதி சார்பதிவாளர் மற்றும் வட்டாட்சியர் இடையே நடந்த சட்டக்கருத்துரை பற்றி எனக்கு எப்படி தெரியும் என்றால் அதை பற்றி எனக்கு எதுவும் தெரியாது . 1–ம் பிரதிவாதி தரப்பில்

மோசடியாக ஆவணம் தயார் செய்யப்பட்டதாக சொல்லி இருப்பது தொடர்பாக நான்மேல் முறையீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கடந்த 01.12.2020 ம் தேதி ராஜமாணிக்கம் என்பவரது பெயரில் தாவா சொத்து தொடர்பாக வில்லங்கம் பதிவாகியுள்ளது ஆனால் நான் அதற்கு பின்னிட்டு 6 மாதங்கள் கழித்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. 1–ம் பிரதிவாதி சட்டப்படியாகதான் பத்திர பதிவு மேற்கொண்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல . பொதுவாக பட்டா மாற்றம் செய்யும்போதும் அதன் உரிமையாளருக்கு அ றிவிப்பு அனுப்பியபிறகுதான் பட்டா மாற்றம் மேற்கொள்ளப்படும் என்றாலும் தாவா சொத்து எனக்கு உரிமை இல்லாததால் தான் மேற்படி சொத்து பட்டா மாற்றம் செய்யும்போது எனக்கு அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்று சொன்னால் தாவா சொத்து எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது . தாவா வழக்கில் நான் வட்டாட்சியரை மற்றும் தரப்பினராக சேர்த்து மாவட்ட ஆட்சியரை தரப்பினராக சேர்க்காததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

5. தாவா வழக்கில் அரசை தரப்பினராக சேர்க்கும்போது உரிய அறிவிப்பு கொடுக்கப்படவேண்டும் ஆனால் இவ்வழக்கில் அவ்வாறு அறிவிப்பு கொடுக்கப்படாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல . (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMK VANNIYAM